# கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை 2024-2025 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் 2017-ல் ஆணையிடப்பட்டவாறு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.487/கனிமம்/2016 நாள் 01.11.2017-இன்படி கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை உருவாக்கப்பட்டது மேலும் அறக்கட்டளை பத்திரமானது 01.11.2017 அன்று தயார் செய்யப்பட்டு கடலூர் மாவட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உறுப்பினர்களின் பதவி காலம் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு புதுப்பிக்கப்படவேண்டும். அவ்வாறு மத்திய மற்றும் மாநில அரசின் வழிகாட்டுதல்களின் படி புதுபித்து புதிய உறுப்பினர்கள் கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டயின் அங்கத்தினர்களாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.487/கனிமம்/2016 நாள் 23.02.2022-இன்படி நியமனம் செய்யப்பட்டனர் நியமனம் செய்யப்பட்ட அறக்கட்டளை உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

| வ.எண். | நிர்வாகக் குழு அமைப்பு | மேலாண்மைக்குழு அமைப்பு |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், கடலூர். | பாராளுமன்ற உறுப்பினர்கள் கடலூர் மற்றும் சிதம்பரம். |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர். | சட்ட மன்ற உறுப்பினர்கள், கடலூர், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், விருத்தாசலம், திட்டக்குடி, நெய்வேலி, மற்றும் பண்ருட்டி |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கடலூர். | மாவட்ட ஆட்சியர், கடலூர். |
| 4. | கூடுதல் ஆட்சியர்/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர். | மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர். |
| 5. | துணைஇயக்குநர், சுகாதாரப்பணிகள், கடலூர். | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கடலூர். |

| | | |
|---|---|---|
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், கடலூர். | கூடுதல் ஆட்சியர்/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர். |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், கடலூர். | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், வளர்ச்சி, (PAPD), கடலூர். |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், கடலூர். | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, கடலூர். |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கடலூர். | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கடலூர். |
| 10. | முனைவர். T.சுந்தரமூர்த்தி, எம்.எஸ்சி. (வன உயிர் உயிரியல்), பி.எட்., பி.எச்.டி. (விலங்கியல்), உதவி இயக்குநர், சி.ஆர்.பி., சுற்றுச்சூழல் கல்வி மையம், சென்னை. | மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம், கடலூர். |
| 11. | | மாவட்ட வன அலுவலர், கடலூர். |
| 12. | | முதன்மை பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கடலூர். |
| 13. | | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, கடலூர். |
| 14. | | மாவட்ட கருவூல அலுவலர், கடலூர். |
| 15. | | மாவட்ட சமூக நல அலுவலர், கடலூர். |
| 16. | | துணை இயக்குநர் (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப்பணிகள், கடலூர். |
| 17. | | சார் ஆட்சியர், சிதம்பரம். |
| 18. | | வருவாய் கோட்டாசியர், விருத்தாசலம். |
| 19. | | வருவாய் கோட்டாசியர், கடலூர் |

2) கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, கடலூர் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண் 6577395044) துவங்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) கடலூர் மாவட்டத்தில் ஒரு பெருங்கனிம சுரங்கக் குத்தகை 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டதால், அந்த ஒரு பெருங்கனிம குவாரிக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. 12.01.2015-க்கு பின்னர் பெருங்கனிம குத்தகை ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 15.01.2015-க்கு பின்னர் வழங்கப்பட்டதால் உரிம கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது

4) கடலூர் மாவட்டத்தில் 905 வருவாய் கிராமங்கள் சுரங்க பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது.

5) கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக 31.3.2025 வரை ரூ.714,95,03,979/- (ரூபாய் எழுநூற்று பதினான்கு கோடியே தொன்னுற்று ஐந்து இலட்சத்து மூன்று ஆறாயிரத்து தொன்னுற்று ஏழுபத்து ஒன்பது மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2024-2025 குத்தகைதாரர்களிடம் வசூலிக்கப்பட்ட கடலூர் மாவட்ட அறக்கட்டளை நிதி ரூ.94,72,67,148/- மற்றும் விதிகளை மீறி கனிமங்களை கடத்தி சென்ற வாகனங்கள் பெயரில் நீதிமன்ற உத்தரவின் பெயரில் வசூலிக்கப்பட்ட கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி ரூ.13,83,402/- மற்றும் கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை சேமிப்பு கணக்கின் மூலம் வரப்பெற்ற வட்டி ரூ.4,06,49,887/- ஆக மொத்தம் ரூ.98,93,00,437/- (ரூபாய் தொன்னூற்று எட்டு கோடியே தொன்னூற்று மூன்று

இலட்சத்து நானுற்று முப்பத்தி மூன்று மட்டும்) 2024-2025 ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்டு (DMFT) மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

6) 2024-2025 ஆம் நிதியாண்டில் கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் நிர்வாக குழு கூட்டம் மற்றும் மேலாண்மைக்குழு கூட்டம் பெஞ்சல் புயலால் கடலூர் மாவட்டத்தில் கடுமையான சேதம் ஏற்பட்ட காரணத்தினாலும் அதை தொடர்ந்து நிகழந்த சட்டமன்ற கூட்டத்தொடராலும் கூட்டம் ஏதும் நடைபெறவில்லை.

7) 2024-2025 ஆம் நிதியாண்டின் முடிவில் மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள ரூ.94,72,67,148/- நிதியனாது 2025-2026 ஆம் நிதியாண்டில் நலத்திட்டப்பணிகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் என்றும் இவ்வறிக்கையானது கடலூர் மாவட்ட அறக்கட்டளை முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(3/5)

தலைவர், கடலூர் மாவட்ட கனிம
அறக்கட்டளை நிதி /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

2/2

3/5/25

நகல்:
அனைத்து நிர்வாக மற்றும் மேலாண்மைக்குழு உறுப்பினர்கள்,
கடலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை,
கடலூர்.

3/5/2025

03/05/25